**புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியம் - 2017**

---

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2008 இன் 01 ஆம் இலக்க மோட்டார் வாகனங்களின் வாயு வெளியேற்றலை கட்டுபடுத்தும் கட்டளையின் கீழ், 2009 திசெம்பர் 29 திகதி மேற்கொள்ளப்பட்ட வாயு வெளியேற்றல் பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 9(ஈ) பந்தி மற்றும் 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின் (அதிகாரம் 203) 29 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான

கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------------

நிதிக் கூற்றுக்களினால் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையின் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

மீளாய்வாண்டின் போது திறைசேரி உண்டியல்கள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 405,852,746 இற்கான தொகை மற்றும் ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 10,966,964 தொகையான திறைசேரி உண்டியல்களின் பெறுமதி காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் வெவ்வேறாக காட்டப்பட வேண்டுமெனினும் அப்பெறுமதி ஒன்றிற்கு ஒன்று சமப்படுத்தி தேறிய பெறுமதியாகிய ரூபா 394,885,782இற்கான தொகை மாத்திரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3 நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 187,356,003 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 197,173,302 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,817,299 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வாயு வெளியேற்றல் கட்டண வருமானம் ரூபா 7,086,755 இனால் அதிகரித்திருந்த போதிலும் பராமரிப்பு செலவுகள் 2,980,381 இனால் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 10,574,362 இனால் அதிகரித்திருத்தல் மேலே நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 171,131,419 இற்கான மிகை முரண்களுடன் 2017 ஆண்டளவில் ரூபா 187,356,003 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. அவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துகளுக்கான பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 185,139,458 தொகையாக காணப்பட்ட பங்களிப்பு முரண்களுடன் வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 214,531,051 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் விரைவு விகிதாசாரம் 29:1 தொகையாக காணப்பட்டதுடன் அது கடந்த ஆண்டு 1,131:1 ஆகக் காணப்பட்டமையால் மிகவும் கூடிய தொழிற்பாட்டு மூலதனமொன்று பேணப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் துூர நோக்கு, சேவைகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்வதற்காக 03 வருடங்களை விட குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 திகதி 01 / 2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும் அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) எதிர்பார்த்த பிரதான பணிகளை நிறைவேற்றும் நோக்கில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 05 பிரதான பணிகள் மாத்திரம் அதில் அடங்கியிருந்தன.

(ii) செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள அனேக விடயங்கள் செயற்படு நிலையில் காணப்படாததுடன் அனேக செயற்பாடுகள் பல வருட காலம் முதல் முன் கொண்டு வந்து காணப்படுபவையாகும்.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாயு மாசடைந்துள்ள பரப்புகள் மற்றும் பிரதேசங்களை இனங்காண்பதற்கு நிதியத்தினால் “ கண்டிப் பிரதேசத்தில் சுற்றோட்ட காற்றின் நிலைமையை அளவை செய்தல் மற்றும் மாதிரி வடிவங்களை வடிவமைத்தலுக்கான செயற்திட்டம். “வாகனங்களை சார்ந்த வாயு மாசடைதல் மற்றும் இணைந்த சுகாதார மட்டத்தை மதிப்பாய்வு செய்வதற்காக கொழும்பு நகர சபை பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளை கேந்திரமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவ ஆய்வு செயற்திட்டம்” போன்ற செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருந்த போதிலும் சுகாதார ஆபத்தினை குறைப்பதன் மூலம் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான விதத்தில் வாயு நிலைமையை முன்னேற்றுவதற்காக போதியளவு செயற்பாடுகள் மீளாய்வாண்டு இறுதிவரை செயற்படுத்துவதற்கு இயலாதுள்ளது.

(ஆ) நிதியத்தின் அலுவல்களை நடத்தி செய்வதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய தரப்பினர்கள் தொடர்பாக நிதியத்தில் நம்பிக்கை பொறுப்பு உறுதியில் அறுதியாக குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறான தரப்பினரின் பங்களிப்பு இன்றி பல்வேறு நிறுவனங்களுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் மாத்திரம் நிதியத்தின் அலுவல்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக நிதியத்தினால் இது வரை செயற்படுத்தியிருந்த பல்வேறு செயற்திட்டங்களில் அலுவல்கள் உரிய முறையில் மதிப்பாய்வு செய்தலுக்கு, கணிப்பீடு செய்வதற்கு அல்லது மீளாய்வொன்றுக்கு ஆளாக்கி இருக்கவில்லை.

(இ) வாகன முகாமைத்துவதற்காக வசதிகள் வழங்குதல் மற்றும் முன்னேற்றுவதும் நிதியத்தின் குறிக்கோள் ஒன்றாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தியிருப்பதாக அவதானிக்கப்படவில்லை.

(ஈ) புகை சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களின் அலுவல்கள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்று நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்காததுடன் நாட்டில் காணப்படும் 384 புகை பரீட்சித்தல் நிலையங்களில் 83 எனப்படும் 22 சதவீத தொகையொன்று மாத்திரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் பரிசோதனை செய்யப்பட்டிருந்தது.

(உ) வாயு வெளியேற்றும் பரிசோதனை மேற்கொள்ளும் 02 தனியார் நிறுவனங்களினால் மீளாய்வாண்டின் போது 4,545,537 தொகையான வாகனங்களுக்காக புகை சான்றிதழ் வழங்கியிருந்த போதிலும் நிதியத்தினால் வீதப் பரிசோதனைகள் மேற்கொண்டிருந்தது. அவற்றில் புகை சான்றிதழ் வழங்கியிருந்த வாகனங்களில் 3,971 வாகனங்களை மாத்திரமே. அவை வழங்கியிருந்த புகைச் சான்றிதழ்களின் 0.09 சதவீதமான மிகைக்குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

(ஊ) நிதியத்தினால் வீதிப் புகைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 3,971 வாகனங்களில் 1,425 வாகனங்களும் உரிய தரமுடையவையாக காணப்படவில்லை என இனங்கண்டிருந்தது. குறிப்பிட்ட வாகனங்களின் மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் வாயு வெளியேற்றல் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் தடுத்து வைத்த வாகனத்தை விடுவித்திருந்தது. அவ்வாறு தடுத்து வைத்துள்ள அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான விபரங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்த நிறுவனத்திற்கு அறிவித்திருக்காமையின் காரணமாக முறைசாரா விதமாக மீண்டும் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் காணப்படுவதற்காக அவதானிக்கப்பட்டது.

## 4.2 பதவியணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 47 உத்தியோகத்தர்களை கொண்ட பதவியணி ஒன்றினை திறைசேரியின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பதவியணியினை முறைப்பிரகாரம் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதியத்தில் அலுவல்கள் நடத்தி செல்வதற்காக உச்ச சேவைக் காலம் இரண்டு வருடங்கள் இருக்க கூடிய விதமாக ஒப்பந்த அடிப்படையில் 2011 ஆண்டு முதல் 19 பேர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். இரண்டு வருட சேவைக் காலம் முடிவில் அதே உத்தியோகத்தர்களையே மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு இருந்ததுடன், ஒரே உத்தியோகத்தர் குழுவினை இரண்டு இரண்டு ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 10,944,272 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்த பதவியணியினருக்கு 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு (திருத்திய) சட்டத்தின் பிரகாரம் கிடைக்க வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கு உரித்து கோரும் சந்தர்ப்பம் ஒன்று கிடைக்காது போகும் என அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 அகக் கணக்காய்வு

---

நிதியத்திற்காக வேறாக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்ற நிறுவி இருக்காததுடன் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமும் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.2 தாமதமாகிய செயற்திட்டங்கள்

---

கண்டி பிரதேச சுற்றோட்ட காற்று நிலைமையை அளவை செய்யும் மற்றும் மாதிரி வடிவங்களை வடிவமைப்பதற்கான செயற்திட்டத்திற்காக பேராதனை பல்கலைக்கழகத்துடன் ரூபா 16,195,000 இற்கான சேவை உடன்படிக்கை ஒன்று 2015 திசெம்பர் 02 திகதி மேற்கொண்டிருந்துடன் அப்பணத்தில் ரூபா 8,000,000 தொகை 2015 ஆண்டின் போது மற்றும் ரூபா 8,000,000 தொகை 2017 ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஜனவரி 05 திகதி அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை 2017 திசெம்பர் 31 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு திகதியாகிய 2018 மே 24 வரை இறுதி செயற்திட்ட அறிக்கையை வழங்குவதற்கு உரிய பல்கலைக்கழகத்தினால் முடியாதிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

5 செலவு விடயங்களுக்கான ரூபா 191 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான செலவு ரூபா 60 மில்லியன் எனப்படும் ஏற்பாட்டுத் தொகையில் 31 சதவீதம் மாத்திரமாகும். அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே பாரிய வித்தியாசமொன்று காணப்படல் |
| (ஆ) | பதவியணி நிருவாகம் | நிதியத்தில் அலுவல்களை செயற்படுத்துவதற்காக போதியளவு தகைமைகள் உடைய பதவியணி ஒன்று காணப்படாமை. |
| (இ) | வாயு வெளியேற்றல் பரிசோதனை | முழு நாடும் அடங்கக் கூடிய விதமாக வாயு வெளியேற்றல் அலுவல்கள் தொடர்பாக வீதிப்பரிசோதனை செயற்பாடு ஒன்று அறிமுகப்படுத்தியிருக்காமை. |